R 5239 (page 150)

# வாழ்க்கைக் கடலில் கொந்தளிப்புகள்

## STORMS ON THE SEA OF LIFE

"அவர் கொந்தளிப்பை அமர்த்துகிறார்." - சங்கீதம் 107:29

உலகத்தில் ஒரு மனுஷனை தனது சிறிய தன்மையை உணர வைக்கக்கூடிய ஒன்று இருக்கிறதென்றால் அது கடலில் ஒரு புயலாக இருக்கிறது. அந்த புயலை மனித கரத்தினால் அடக்க முடியாது என்று கடலில் பயணிப்போர் உணருகிறார்கள். நமது தலைப்பு வசனம் சர்வ வல்லமையுள்ள நமது பரம பிதாவை குறிப்பிடுகிறது. எனினும் நமது பரம பிதாவானவர் எப்பொழுதும் கருவிகளை பயன்படுத்துகிறார். அவர் ஒரு மாபெரும் ஜீவியை சிருஷ்டித்த பிறகு ஓய்ந்திருந்தார் என்று வேத வாக்கியங்கள் நமக்கு கூறுகின்றன. அந்த ஒருவர் சர்வ சிருஷ்டிக்கும் முந்தினவரும் பிதாவானவரின் ஒரே பேறானவருமாகிய வார்த்தையானவர். ( கொலோசெயர் 1:15; வெளிப்படுத்தல் 3:14 ) அதிலிருந்து பிதாவானவர் சகல வல்லமையும் கையாண்டது கர்த்தராகிய இயேசுவைக் கொண்டு தான்.

நமது தலைப்பு வசனமாக பயன்படுத்தப்பட்ட வேத வாக்கியம், இந்த தீர்க்கதரிசனத்தைச் சொன்ன சங்கீதக்காரனால் முழுமையாக முற்றிலுமாக புரிந்துக் கொள்ளப்படவில்லை. மற்ற பல வேதவாக்கியங்களைப் போல இதுவும் கிறிஸ்துவின் சபைக்கு ஒரு விசேஷித்த பிரயோகத்தை உடையதாக இருக்கிறது. இவைகளெல்லாம் நமக்கு எச்சரிப்புண்டாகும்படியும் அறிவுறுத்தலுக்காகவும் முன்னரே எழுதப்பட்டிருக்கிறது என்று அப்போஸ்தலர் பவுல் நமக்கு கூறுகிறார். (1 கொரிந்தியர் 10:11) கிட்டதட்ட அனைத்து தீர்க்கதரிசனங்களும் கர்த்தரையும் அவரது சரீரத்தையும் முதலாவது அங்கீகரிக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். அநேக கொந்தளிப்புகள் கர்த்தருடைய சீஷர்களாகிய சிறு மந்தை மேல் அவரால் அனுமதிக்கப் பட்டிருக்கின்றன. "வாழ்க்கைப் புயல்கள் கொந்தளிக்கும் போது" என்று நாம் சில சமயங்களில் பாடுகிறோம். கொந்தளிப்புகள், சோதனைகள், மற்றும் துன்பங்களை அனுபவிக்காதவர்கள், அவர்கள் தேவனுடைய பிள்ளை என்பதற்கான ரூபகாரங்களில் குறைவுபடுகிறார்கள் என்று அப்போஸ்தலர் தனது நிருபத்தில் குறிப்பிடுகிறார். ஏனெனில் அவர்களை புத்திரராக எண்ணி நடத்த மாட்டார். ( எபிரேயர் 12:7,8 )

நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தால் நாம் பரீட்சைகளையும் சோதனைகளையும் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். இவைகள் நம்மை ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடையும்படிச் செய்யும். (கொலோசெயர் 1:12) இந்த எல்லா அனுபவங்களிலும் பரீட்சையின் போக்கு, நமக்கு தெய்வீக பாதுகாப்பும் பாரமரிப்பும் தேவை என்பதை உணரச் செய்து, கர்த்தரிடம் நம்மை நெருங்கும்படி செய்கிறது. ஆகையால் இந்த கொந்தளிப்புகளிலிருந்து நமக்கு ஒரு ஆசீர்வாதம் வருகிறது. நேரடியான அல்லது உருவகமான புயல்களை தேவன் ஏற்படுத்துகிறார் என்று நாம் நினைக்கக்கூடாது. சாத்தான் பெரிய சத்துருவாக இருக்கிறான். நேரடியான புயல்கள் இயற்கையின் சட்டப்படி வெளிப்படையாக வருகிறது. எனினும் அவைகளை ஏற்படுத்துவதற்கு ஆவியின் ஜீவிகள் தங்கள் வல்லமைகளை அப்பியாசப்படுத்தக் கூடும். நமது ஆண்டவரின் ஊழியக் காலத்தில் இப்படிப்பட்ட ஒருபுயல் கலிலேய கடலில் எழுப்பப்பட்டது. புயலானது திடீரென மிகவும் பெரியதாக வந்தது. கடலானது பெரியதாக இல்லாதிருந்தாலும், படகும் சீஷர்களும் ஆபத்தில் இருந்ததாக காணப்பட்டது. அவர்கள் அனுபவமுள்ள மீனவர்களாக இருந்தாலும் அவர்கள் மிகவும் பயத்தில் இருந்தார்கள். படகின் மூலையில் இயேசு உறங்கிக் கொண்டிருந்தார். அவர்கள் அவரிடத்தில் வந்து, "ஆண்டவரே, நாங்கள் மடிந்து போகிறோம், நீங்கள் கவனிக்கவில்லையா?" என்று கூறி அவரை எழுப்பினார்கள்.

## புயல்கள் விசுவாசத்திற்கு ஒரு சோதனை

இயேசுவும் அவரது சீஷர்களும் கடலில் அந்த படகில் இருந்தார்கள் என்பதை சாத்தான் அறிந்திருந்தான். ஒரு வேளை அவன் இந்த புயலை ஏற்படுத்தி இயேசுவை அழித்து, தேவனுடைய திட்டத்தை நாசம் பண்ணலாம் என்று நினைத்திருக்கலாம். இதை அவன் செய்யவில்லை என்றால், பிதாவானவர் கூட இதை செய்திருக்கலாம் என்று யூகிக்கிறோம். பிறகு இயேசு, பாடத்தை அவர்களுக்கு போதிக்கும்படியாக "அற்ப விசுவாசிகளே, ஏன் சந்தேகப்பட்டீர்கள்?" என்று கூறினார்.

கர்த்தர் புயலை போகவிட்டதற்கான வெளிப்படையான நோக்கம் சீர்களின் விசுவாசத்தை சோதிப்பதற்காக ஆகும். மேலும் அவர்களுக்கு ஒரு பாடத்தை போதிக்கவும் இப்பொழுது இந்த வசனம் நமக்கு போதனை கொடுக்கவும் ஆகும். அவர்களது அனைத்து கஷ்டங்களிலும், அது அவர்களது சொந்த பலவீனத்தினாலோ, அல்லது மற்றவர்களது பலவீனத்தினாலோ, அல்லது விழுந்துபோன தூதர்களின் கிரியைகளினாலோ அது வந்திருந்தாலும் சகலமும் தெய்வீக மேற்பார்வையின் கீழ் நடைபெறுகிறது என்பதை எதிர்கால வருடங்களில் அவர்களுக்கு நினைவுபடுத்துவதற்காகவே ஆகும். சகலமும் நமது நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்றும், சோதனையை தாங்கத்தக்கதாக சோதனையோடு கூட அதற்கு தப்பித்துக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் என்றும் நமக்கு உறுதிமொழி கொடுக்கப்பட்டிருக்கிறது. (1 கொரிந்தியர் 10:13)

இது கடலின் புயலிலும், கர்த்தர் அதை அடக்கியதிலும் விளக்கப்பட்டது. ஆகையால் நாம் சோதனைகளையும் கஷ்டங்களையும் பெறுவோமானால் நாம் கர்த்தரிடம் சென்று கதற வேண்டும். விசுவாசத்தை அதிகமாக அப்பியாசப்படுத்தி கதற வேண்டும். "எனக்காக என்ன விதி நியமிக்கப்பட்டிருக்கிறதோ, அதிலிருந்து தப்ப முடியாது" என்பது போன்ற ஒரு குருட்டு விசுவாசமாக இருக்கக் கூடாது. பின்னால் சொல்லப்பட்டது, புறஜாதியாரின் நிலைமை, ஆனால் நமக்கு அது மாதிரி அல்ல, கர்த்தர் புயலானது நம்மை அதிகமதிகமாக அழுத்தும்படி செய்வார். அப்பொழுதுதான் நாம் அவரை நோக்கிக் கூக்குரல் இடுவோம். பிறகு அவர் அதை கேட்டு நமக்கு தேவையான விடுதலையை தருவார். அவர் எப்பொழுதுமே வெகு சீக்கிரத்திலே விடுதலையை தரமாட்டார். ஆனால் தப்பிக்கும்படியான ஒரு போக்கை நமக்கு ஏற்படுத்துவார். அவர் புது சிருஷ்டியுடன் தொடர்பு கொண்டிருக்கிறார் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். இந்த புயல் நமக்குள்ளே உணர்ச்சியின் புயலாக, கோபத்தின் புயலாக, மனக்கசப்பின் புயலாக

**R5239 : page 151**

இருக்கலாம். இது அப்படியே போகும்படி அனுமதிக்கக்கூடாது. தேவனுடைய உதவிக்காக கூக்குரலிட வேண்டும். இந்த புயல்களை, சோதனைகளை நாம் ஜெயங்கொள்ளும்படி செய்வார்.

## வருகின்ற உக்கிரத்தின் மாபெரும் புயல்

கர்த்தர் இப்பொழுது சபைக்கு பண்ணுகிறதையும், எதிர்காலத்தில் உலகத்திற்கு பண்ணப்போகிறதையும் கலிலேய கடலின் நிகழ்வு சித்தரிக்கிறது. ஆறாயிரம் வருட நீண்ட காலமாக ஆளுகையிலிருந்த பாவம் மற்றும் மரணத்திலிருந்து முழு உலகத்தையும் மீட்கவே தேவன் உத்தேசிக்கிறார். அவ்வப்போது காணப்படுகிற சிறிய அமைதிகளுடன் இந்த காலம் ஒரு தொடர்ச்சியான புயலாக இருக்கிறது. இந்த காலக்கட்டத்தில் உலகமானது தேவனுடனான இணக்கத்திற்கான விரும்பத்தக்க தன்மைக்கான குறிப்பிட்ட மாபெரும் பாடங்களை பெற்றுக் கொள்கிறது. தேவனுடன் முழு இசைவுடன் இருப்பதற்கும் தெய்வீக வழி நடத்துதலுக்கு மிகவும் கீழ்ப்படிவதற்குமான முக்கியத்துவத்தை சீக்கிரத்தில் மிகவும் உணர்ந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் வருவார்கள். இப்படியாக அடுத்த யுகத்திற்கான அவர்களது கல்வியில் அஸ்திவாரக் கல் போடப்படுகிறது.

முடிவாக, கலிலேய கடலின் இந்த புயல், இந்த யுகம் முடிவடைகிற மகா உபத்திரவக் காலத்தை வரைபடமாக சித்தரிக்கிறது. பிறகு சாத்தானின் ஆளுகை முடிவுக்கு வரும். மேசியாவின் ஆளுகை ஆரம்பிக்கும். மகா உபத்திரவ காலத்தை இயேசுவின் ராஜ்யம் கொண்டு வருவதாக நாம் நினைக்கக்கூடாது. சபையுடனாக கிறிஸ்துவின் கிரியை, சபையின் நிறைவு மற்றும் சபையின் மகிமையுடன் கிறிஸ்துவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்பது வேதகாம கருத்தாக காணப்படுகிறது. இந்த ஆபத்தின் நாள் குறிப்பாக யேகோவாவின் நாளாக இருக்கும். இதில் தெய்வீக நீதியின் உதவி கொஞ்சம் இருக்கும்.

எனினும் கர்த்தராகிய இயேசுவை தவிர்க்கிற அர்த்தத்தில் நாங்கள் கூறவில்லை. ஏனெனில் தேவன் செய்கிற சகல காரியங்களிலும் அவர் தான் பிரதான காரணியாக இருக்கிறார். ஆனால் மேசியாவின் ராஜ்யம் வரும்போது, கட்டுப்படுத்தும் அதிகாரத்தை அப்பியாசப்படுத்தும், பெருமையுள்ளவைகளை தாழ்த்தும், மனிதனின் உக்கிரத்தை, தேவனை துதிக்கும்படியாக செய்யும். மனிதனின் இந்த உக்கிரம், “யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலம் மட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலத்தை” கொண்டு வரும். இது சில வேதாகம சித்திரத்தில் ஒரு சூழற்காற்றாக, கொந்தளிக்கும் அலையாக, சீறுகின்ற கடலும் அலைகளுமாக குறிப்பிடப்படுகிறது. பிறகு முழு மனித நிர்மாணங்களையும் அழிக்கக்கூடிய மகா புயலின் மத்தியிலே மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். அது போர்களை ஒழியப்பண்ணும். சாத்தான் கட்டப்படுவான். தேவனுடைய மகிமையின் அறிவின் ஒளியினால் முழு உலகமும் நிறைந்திருக்கும். “சகல ஜனங்களாலும் விரும்பப்பட்டது வரும்.” மேசியாவின் இந்த ராஜ்யத்தினால் புயல் அமைதிப்படுத்தப்படும் என்று உணர்ந்து கொள்ளப்படும். ( ஆகாய் : 2 : 7 )

---------------------------